ஒரு தொழிலாளருக்கு கார்டு கிடைக்கவில்லை என்று சொன்னால் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிவைத்து நடவடிக்கை எடுக்கச் செய்யலாம்.

பொதுவாக கிராமங்களில் நாம் இதை வழங்காவிட்டாலும் தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டும் என்று பிரத்தியேக ஏற்பாட்டின்படி இது செய்யப்படுகிறது. ஆகவே, எந்த ஆலை என்று குறிப்பிட்டு எழுதியனுப்புவார்களேயானால் அதை நான் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் சொல்கிறேன்.

திரு. என். மருதாசலம்: மில் தொழிலாளர்கள் கிராமங்களிலிருந்து வேலைக்கு வருகிறார்கள். அவர்கள் அந்தந்த கிராமங்களில் கார்டுகளை பதிவு செய்துகொண்டுள்ளார்கள். அவர்களுக்கு மில்லில் உணவு தானியம் போடுவதில்லை. கிராமப் பகுதிகளிலும் உணவு தானியங்கள் கிடைப்பதில்லை. அவர்களுக்கு உடனடியாக உணவு தானியங்கள் கிடைக்கச் செய்யவேண்டும். லே அவுட் அநேகமாகக் கொடுக்கப்படுகிறது. அதனால் உணவு தானியங்கள் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. எனவே அவர்களுக்கு கிராமப்பகுதிகளில் கூட்டுறவுக் கடைகளில் உணவு தானியங்கள் வழங்க அரசாங்கம் உத்தரவு இடுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: லே அவுட் அல்ல, லே ஆப் என்று சொல்கிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் எடுத்திருக்கிற கொள்கைப்படி சில கிராமங்களில் உணவு தானியங்கள் கிடைக்கவில்லை என்று சொல்வது தவறு. கிராமங்களில் உணவு தானியங்கள் இருக்கிற காரணத்தால் உற்பத்தி ஸ்தானங்களில் நாம் உணவு தானியம் கொடுப்பதில்லை என்று முடிவு எடுத்திருக்கிறோம். தொழிலாளர்கள் இருக்கிற பகுதிகளானால் கொடுக்கவேண்டுமென்று முடிவு எடுத்திருக்கிறோம். கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொடுக்கவேண்டும் என்று போட்டிருக்கிறோம். அப்போதுதான் கட்டுப்பாடாகக் கொடுக்க வாய்ப்பு ஏற்படும்.

(ஆ) தமிழ்நாடு மின்வாரியத் தொழிலாளர்களுக்கு ஒப்பந்தப்படி ஊதிய உயர்வு அளிக்க மின்வாரியம் காலம் கடத்துவதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

திரு. நா. வீராசாமி: தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணியாற்றும் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு ஏற்கனவே செய்து கொண்டுள்ள ஒப்பந்தப்படி

1975 ஏப்ரல் 5] [திரு. நா. வீராசாமி]

1—12—1974 முதல் ஊதிய உயர்வு அளிக்கப்படாமல் மின்சார வாரியம் காலம் கடத்திக்கொண்டு வருகிறபடியால் தொழிலாளர்கள் மத்தியில் நிலவும் கொந்தளிப்பான நிலை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு தொழில், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்த அறிக்கை @ கிட்டத்தட்ட 6 பக்கம் இருப்பதால்—இதை மன்றத்தில் வைத்து இருக்கிறேன்—மாண்புமிகு தலைவர் அனுமதி கொடுத்தால், இதை வாசிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மன்றத்தில் வைத்தால் போதும்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, இந்த அறிக்கை பெரிய அறிக்கையாக 6 பக்கம் அளவில் இருக்கிறது. இதை இங்கே வந்துதான் படிக்கவேண்டியிருக்கிறது. அப்படி அந்த அறிக்கையைப் படிக்கின்றபோது பல பிரச்னைகளை, கிளாரிபிகேஷன்களை கேட்க வேண்டியிருக்கிறது. ஆகவே, இரண்டு, மூன்று விளக்கங்கள் கேட்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரே ஒரு கிளாரிபிகேஷன் தான் கேட்கலாம்.

திரு. நா. வீராசாமி : இரண்டு கேள்விகள் கேட்க அனுமதி அளிக்கப்பட வேண்டும். மூன்றாவதாகக் கேட்பதற்குத்தான் கன்செஷன் வேண்டும் என்று கேட்டேன்.

1—12—1974-முதல் புதிய சம்பள விகிதங்கள் பேச்சு வார்த்தைகள் மூலம் மாற்றி அமைக்கப்பட்டு இருக்கவேண்டும். ஆனால் நம்முடைய அமைச்சர் அவர்கள் 1—12—1974-க்குப் பிறகு தான் அந்தத் தொழிற் சங்கங்களை அழைத்து, 6 முறை பேசியிருப்பதாக அறிக்கையில் இருக்கிறது. அப்படிப் பேசியும் எந்த விதமான முடிவுக்கும் வரவில்லை. அந்த சங்கங்களோடு பேசி எப்போது முடிவுக்கு வரும்? ஏற்கனவே 1—12—74 முதல் புதிய

@ 136–141-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

சம்பள விகிதங்கள் மாற்றி அமைத்து இருக்க வேண்டும் ஆகவே, உடனடியாக ஒரு மாத காலத்திற்குள் அந்தச் சங்கங்களை அழைத்துப் பேசி முடிவுக்கு வருமா ?

இரண்டாவதாக, அந்தச் சங்கங்களைப் பொறுத்தவரையில், பேரறிஞர் அண்ணு அவர்கள் இருந்த காலத்தில், அந்தச் சங்கங்களுக்கு எந்த யூனியனுக்கும் ரெகக்னிஷன் இல்லாததால், மின்சார வாரியமே ரெகக்னிஷன் கொடுத்து, அந்தச் சங்கங்களோடு பேச்சு வார்த்தை நடத்தியது. இப்போது ஏற்கனவே இருந்த சங்கங்களைத் தவிர புதிதாகச் சங்கங்கள் ஏற்பட்டு உள்ளன. உறுப்பினர்கள் அதிகமாக இருக்கும் சங்கங்கள் இருப்பதாகத் தெரிகிறது. ஆகவே, அப்படிப்பட்ட சங்கங்களையும் அழைத்து நம்முடைய அரசாங்கம், வாரியம் பேச்சு வார்த்தை நடத்த முன் வருமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1—12—74-ல் ஏற்கனவே இருந்த சம்பள விகிதம், பேச்சுவார்த்தை முடிந்து, உயர்த்தி இருக்க வேண்டும். அதற்காக 'வேஜ் ரிவிஷன் குழு' என்று அமைக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 1 மாத காலத்திற்குள் முடித்து விடவேண்டுமென்று அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிருர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல், ரெகக்னைஸ்டு சங்கங்களோடு அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிருர்கள். மற்ற சங்கங்களோடு பேச்சுவார்த்தை நடத்தவும் அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிருர்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. நா. வீராசாமி எழுந்தார்)

MR. DEPUTY SPEAKER : That is not allowed.

திரு. நா. வீராசாமி : ஒரே நேரத்தில் எத்தனைக் கேள்விகள் கேட்க முடியும் ? அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அறிக்கை 6 பக்கத்திற்கு மேல் இருக்கிறது என்ருல், ஆப்-அவர் டிஸ்கஷன், ஒன்-அவர் டிஸ்கஷன் வேண்டுமென்று சொல்லுங்கள்.